# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● அக்டோபர் 21, 2017 Weekly E-paper ● October 21, 2017


# தாஜ்மகால்

## இந்தியாவின் அடையாளம்

● எழில்.இளங்கோவன்

இந்துமத பாசிச ஆட்சி என்ற விருதைத் தட்டிச் செல்லும் பா.ஜ.க வின் அடுத்த குறி ‘தாஜ்மகால்’.

1949 ஆம் ஆண்டு பாபர் மசூதிக்குள் ஒரு சிலை இரகசியமாக வைக்கப்பட்டது. வைத்தவர்கள் இந்துமகா சபையினர். அடுத்த நாளே ஆரம்பித்து விட்டார்கள் ‘அது ராம் ஜென்ம பூமி’ என்று.

1992 ஆம் ஆண்டு பா.ஜ.க.வின் குறி அதுவாகத்தான் இருந்தது. டிசம்பர் 6 ஆம் நாள் கதையை முடித்துவிட்டார்கள். மசூதி இடித்துத் தள்ளப்பட்டது அவர்களால்.

இப்போது அவர்களின் குறி தாஜ்மகால்! அது இந்தியவின் அடையாளம்.

உத்திரப்பிரதேசம் ஆக்ரா, யமுனை ஆற்றங்கரை அருகில் கட்டப்பட்டுள்ளது தாஜ்மகால். கட்டியவர் முகலாயப் பேரரசர்களுள் ஒருவரான ஷாஜகான்.

இவர் ஆட்சிக் காலத்தில் கி.பி.1632 தொடங்கி 1648 வரை முதல் கட்டமாகவும், அதைத் தொடர்ந்து 1654 வரை இரண்டாம் கட்டமாகவும் 22 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது தாஜ்மகால்.

சமர்கண்டிர் உள்ள தைமூரின் சமாதி, மன்னன் உமாயூனின் சமாதி, ஜும்மா மசூதி ஆகிய கட்டிடங்களின் வடிவ அடிப்படையில்



வெனிஸ் நகரச் சிற்பி வெரோனியா–

துருக்கிக் கட்டிடக் கலை வல்லுனர் உஸ்தாத் இதாஅஃபாண்டி –

லாகூர் கட்டிடக்கலை வல்லுனர் உஸ்தாத் அகமது –

ஆகியோரின் வடிவமைப்பில் கட்டப்பட்டது தான் தாஜ்மகால்.

முகலாய மரபுகளை உள்ளடக்கிய, பாரசீகக் கட்டிடக் கலையின் வடிவமைப்பு அது.

தாஜ்மகால் கட்டவேண்டும் என்று ஷாஜகான் முடிவெடுத்தபோது, அதற்காகத் தனக்குச் சொந்தமான நிலத்தை, ஆக்ராவின் மையப்பகுதியில் கொடுத்து உதவியவர் ராஜா ஜெய்சிங். இவர் ஷாஜகானின் நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜா ஜெய்சிங் கொடுத்த அந்த நிலப்பகுதி, பயன்பாடு அற்ற, பயன்படுத்தப்படாத பள்ளமாக இருந்துள்ளது, எனவே அதை 50 மீட்டர் உயரத்திற்கு, யமுனை ஆற்றின் கரை மட்டத்திற்கு மண், கற்கள், பாறைகள்,

தொடர்ச்சி 2ஆம் பக்கம்...

# விடைபெற்றார் ஒரு சுயமரியாதைக்காரர்!

● சுப.வீரபாண்டியன்

சென்ற வாரம் நம்மை அழைத்து, நம்முடைய திராவிடத் தமிழர் அறக்கட்டளைக்காக ரூ.20000/ நன்கொடை அளித்த, அய்யா நீடாமங்கலம் பி.வி. ராஜகோபால் அவர்கள், இந்த வாரம் உயிருடன் இல்லை. 17.10.17 இரவு, தன் 85 ஆவது அகவையில் அவர் மறைந்துவிட்டார்.

தன் வாழ்வை மட்டுமின்றித் தன் மரணத்தையும் அவர் திட்டமிட்டுள்ளார் என்பது வியப்பான செய்தி. இரண்டு மாதங்களுக்கு முன்பே, தன் துணைவியார் சுலோச்சனா அம்மையாரிடமும், தன் மைத்துனர் பேராசிரியர் மாணிக்கவாசகத்திடமும், தன் இறுதி நிகழ்வுகள் எப்படி நடக்க வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளார்.

"நான் காலமெல்லாம் சுயமரியாதைக்காரனாக வாழ்ந்தவன். என் இறுதி நிகழ்வும் எந்த சாதி, மதச் சடங்கும் இல்லாமல் நடத்தப்பட்டு, ஒரு சுயமரியாதைக்காரனாகவே என்னை நீங்கள் வழியனுப்ப வேண்டும்" என்று கூறியுள்ளார். அதுமட்டுமல்லாமல், தன்



படத்திறப்புக்கு மட்டும் ஒப்புதல் அளித்த அவர், அந்தப் படத்தையும் தானே சரிபார்த்து 'இந்தப் படத்தைத் திறந்திடுக' என்று கூறியதோடு, தம்பி சுபவீயை வைத்து படத் திறப்பு நிகழ்வை நடத்துங்கள் என்றும் கூறியுள்ளார்.

எனவே அவர் விருப்பப்படி, அவர் தேர்ந்தெடுத்த படத்தை, அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான் அக்டோபர் 20 காலை, சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள அவரது இல்லத்தில், அவரின் உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் திறந்து வைத்தேன். நான் நெகிழ்ந்து போன நிமிடம் அது!

அவர்கள் இல்லத்திற்கு விருந்தினனாகச் சென்ற நான், ஓர் உறவினனாகத் திரும்பினேன். "அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்?"●

1ஆம் பக்க தொடர்ச்சி...

இட்டு நிறப்பட்டு, மேடாக்கிய பின்னரே தாஜ்மகால் கட்ட ஆரம்பித்துள்ளார்கள் என்பது வரலாறு தரும் செய்தி.

இதில் இருந்து அறியப்படும் முக்கியச் செய்தி, தாஜ்மகால் கட்டப்பட்ட நிலம் பயன்படுத்தப்படாத பள்ளம்.

அங்கே சிவன் கோயில் இருந்தது என்பதும் அது இடிக்கப்பட்டது என்பதும் மிகப்பெரிய பொய்.

அப்படி இருக்கும் போது “சிவன் கோயிலை இடித்துவிட்டு அந்த இடத்தில் தாஜ்மகால் கட்டப்பட்டு உள்ளது” என்று முதன்முதலாக ஒரு புரளியைக் கிளப்பி விட்டிருக்கிறார், பா.ஜ.க வின் தலைவர்களுள் ஒருவரான வினய் கட்டார்.

இது கலவரத்திற்கு வித்திடுவதாக அமைந்துவிடும் என்பதை அறிந்தே அவர் பேசியிருக்கிறார்.

உ.பி யின் சந்தாரை தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் சங்கீத்சாம் என்பவர், தாஜ்மகாலைக் கட்டிய ஷாஜகானைத் தேசத்துரோகி என்கிறார்.

இஸ்லாமிய மன்னர் ஷாஜகான் கட்டியதால் தாஜ்மகாலை ஒழிக்க வேண்டும் என்பது இவரின் வாதமாக அமைகிறது.

அப்படியானல்

அதே இஸ்லாமிய மன்னர் ஷாஜகானால் கி.பி.1638. முதல் 1648 வரையும் 10 ஆண்டுகளில் கட்டப்பட்ட கட்டிடம்தான் டில்லி செங்கோட்டை.

1857 சிப்பாய்க் கலகத்தின் போது மன்னன் பகதுர்ஷாவிடம் இருந்து ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்ட இச்செங்கோட்டை, அன்று ஆங்கிலேய இராணுவத்தளம்.

1947 ஆகஸ்ட் 14ஆம் நாள் நள்ளிரவில் இந்திய முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு அக்கோட்டையில் இந்திய தேசியக் கொடியை ஏற்றினார். இன்றுவரை அது தொடர்கிறது.

வாஜ்பாயும், மோடியும் அங்கேதான் கொடியேற்றினார்கள்.

அந்த செங்கோட்டை இஸ்லாமிய மன்னர் ஷாஜகானால் கட்டப்பட்டது என்பதனால் அதை என்ன செயலாம்?

சொல்லவேண்டும் பா.ஜ.க!

சரி இந்திய நாடாளுமன்றத்தைக் கட்டியது யார்? இந்துக்களா கட்டினார்கள்?

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தைச் சேர்ந்த சர் எட்வின் லுத்தியன்ஸ், சர் எர்பர்ட் பேக்கன் ஆகிய இரண்டு கட்டிடக்கலை வல்லுனர்களால் 1912 ம் ஆண்டு வட்ட வடிவக் கட்டிடமாக வடிவமைக்கப்பட்டு, 1921 தொடக்கம் 1927 வரையும் 6 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடம் அது.

இந்திய ஆட்சி அதிகார மையமாக இன்று செயல்படும் அந்த நாடளுமன்றம், ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது என்பதால், அதையும் என்ன செய்யலாம்?

ஒரே ஒரு கேள்வி!

இந்து என்று சொல்லப்படும் பார்ப்பனர்கள், இந்தியவில் எங்காவது, ஒரு இடத்திலாவது வரலாற்றுச் சிறப்பு மிகுந்த கட்டிடம் அல்லது கோயிலாவது கட்டி இருக்கிறார்களா?

இந்தியாவில் உள்ள கோயில்கள் அனைத்தும் சூத்திரர்களால் கட்டப்பட்டவைகளே ஒழிய பார்ப்பனிர்களால் கட்டப்பட்டவை இல்லை என்பதை நினைவில் வைத்து மேற்கண்ட கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும் அவர்கள்.

இன்னொரு முக்கிய செய்தி இருக்கிறது,

பாபர், அக்பர், அவுரங்கசீப் ஆகியோர் தேச விரோதிகள்.

அவர்களின் பெயர்கள் வரலாற்றில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்று சொல்லும் பா.ஜ.க சங்கீத்காம், “நாட்டின் உண்மையான, சிறந்த மனிதர்களாகவும், வீரர்களாகவும் விளங்கிய மகாராணா பிரதாப், சத்ரபதி சிவாஜி, ஆகியோரின் வரலாற்றை பள்ளி, கல்லூரிகளில் சொல்லித்தர வேண்டும்” என்று முடிக்கிறார்.

அதாவது இந்தியாவின் உண்மையான வரலாற்றை அழித்துவிட்டு, இந்து வரலாற்றைப் புகுத்த வேண்டும், வரலாற்றைத் திருத்தி மாற்றி எழுத வேண்டும் என்பது பா.ஜ.க வின் கொள்கை என்பது இதன் மூலம் புலனாகிறது.

பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது!

2014 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பா.ஜ.க வின் மோடி அரசால் மக்கள் அமைதி இழந்துவிட்டார்கள்.

15 லட்சம் தருகிறேன் என்றார்

பணமில்லாப் பரிவர்த்தனை என்றார்

பணமதிப்பு நீக்கம் என்றார்

ஜி.எஸ்.டி வரியை போடுகிறேன் என்றார்

நீட் தேர்வு என்றார்

இப்படியே வாட்டி வதைக்கும் மோடி அரசால் இதுவரை நாட்டுக்கு எதுவும் நன்மை ஏற்பட்டதில்லை.

மாறாக நாடு காடாகி வருகிறது.

இப்படிப்பட்ட நிலையில் மீண்டும் மீண்டும் மத அரசியலைக் கையில் வைத்துக் கொண்டு ‘இடிப்பு’ அரசியலை செய்து கொண்டு இருக்கும் மோடி, இதுவரை தாஜ்மகால் பிரச்சனையில் எதுவும் சொல்லாமல் இருக்கிறார். அதனால் அவரும் இதில் இருக்கிறார் என்பது தெளிவாகிறது.

நாட்டில் அமைதி நிலவேண்டும் என்பதே அனைவரின் எண்ணம்.

ஆதலால் நேற்று பாபர்மசூதி, இன்று தாஜ்மகால் என்றால் நாளை என்ன என்ற கேள்வி எழுகிறது.

இந்த கேள்விக்கு ஒரே பதில்தான்!

அடுத்து வரும் பொதுத் தேர்தலில் மோடியின் பா.ஜ.க ஆட்சியைத் தோற்கடிக்க வேண்டும்!

என்றும் பா.ஜ.க ஆட்சி வராமல் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் “தாஜ்மகால்” தான் அடுத்த “பாபர்மசூதி”! ●





புதிய நூல்கள்

நம் அலுவலகத்தில் விற்பனைக்கு வந்துள்ளன!

தோழர்கள் வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டுகின்றோம்!!

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## பொதுக் கூட்டம்




**செ**ன்னை வடக்கு மாவட்டத் தி.மு.கழகம் சார்பில் 20.10.17 அன்று, சென்னை, ராயபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் சுபவீ உரையாற்றுகிறார். மாவட்டச் செயலாளர் சுதர்சனம், சட்டத்துறைச் செயலாளர் கிரிராஜன், பகுதிச்செயலாளர் சுரேஷ், மருது கணேஷ், மனோகரன், எழும்பூர் கோபி, கிருஷ்ணமூர்த்தி, முருகன் ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர்.

## நூல் வெளியீடு




**எ**ழுத்தாளர் கிருஷ்ணவேல் எழுதியுள்ள, "தெரிந்த வரலாற்றின் தெரியாத பக்கங்கள்" நூலை, 15.10.17 ஞாயிறு காலை, சென்னை, கலைஞர் நகரில், தோழர் சுபவீ வெளியிட, தோழர் மதிமாறன் பெற்றுக் கொண்டார்.



## மன்னிப்பு கேட்க வேண்டியவர் யார்?

**ப**ணமதிப்பிழப்பு குறித்து நடிகர் கமல்ஹாசன் அண்மையில் ஓர் அறிவிப்பைச் செய்துள்ளார். "சென்ற ஆண்டு 1000, 500 ரூபாய்த் தாள்கள் செல்லாது என்ற அறிவிப்பை இந்திய அரசு சார்பில் பிரதமர் மோடி வெளியிட்ட போது, அதனை வரவேற்றவர்களில் நானும் ஒருவன். அது சரியான நடவடிக்கை இல்லை என்பதை உணர்ந்து, இப்போது அதற்காகப் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்" என்று கூறியுள்ளார். மன்னிப்பு கேட்க வேண்டிய இன்னொரு மனிதர் இருக்கிறார், அவர் பெயர் மோடி.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்



# மெர்சலைப் பார்த்து மெர்சலாகிப் போனவர்கள்!

ஒரு திரைப்படத்தைப் பார்த்து இவ்வளவு மிரண்டவர்களை இதுவரையில் நாம் பார்த்ததில்லை. அதுவும் மத்தியில் ஆளுங்கட்சியாக இருக்கும் பா.ஜ.க. ஒரு திரைப்படத்தில் வரும் சில உரையாடல்களைக் கண்டு இப்படிக் கதிகலங்குவதைப் பார்க்கப் பரிதாபமாகத்தான் இருக்கிறது!

நடிகர் விஜய் நடித்த 'மெர்சல்' என்ற திரைப்படம் தீபாவளியன்று வெளியானது. எதிர்பார்த்ததை விட மக்களிடம் கூடுதல் ஆதரவைப் பெற்று அது இப்போது ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தப் படத்தில் ஜிஎஸ்டி வரி பற்றி ஏதோ சில உரையாடல்கள் வருகின்றனவாம். அந்தக் காட்சிக்குத் திரையரங்கில் பெரிய வரவேற்பும் கிடைத்ததாம். பொறுக்கவில்லை இங்குள்ள பாஜகவினருக்கு. அந்தக் காட்சியைத் தடை செய்ய வேண்டும் என்று ஒரே இரைச்சல். அது மட்டுமின்றி, நடிகர் விஜய் வருமானவரி ஒழுங்காகக் கட்டியுள்ளாரா என்று ஹெச்.ராஜா கேள்வி எழுப்பியுள்ளார். ஓ...வருமானவரித் துறையின் பயன்பாடு இப்படித்தான் உள்ளது என்று நமக்குப் புரிகிறது.

பாவம் தயாரிப்பாளர், நமக்கு எதற்கு வம்பு என்று கருதி, அந்தக் காட்சியை நீக்கிவிடுவதாகக் கூறியுள்ளார். ஆனால் அதற்குப் பிறகுதான் அந்தக் காட்சி மக்களிடம் வெகு விரைவாகப் பரவத் தொடங்கியுள்ளது. ஆம், வாட்ஸ் அப், முகநூல், ட்விட்டர் போன்ற அனைத்து சமூக வலைத்தளங்களிலும், அங்கிங்கெனாதபடி எங்கும் இப்போது அந்தக் காட்சிதான் ஒடிக் கொண்டிருக்கிறது. படம் பார்க்காதவர்கள் கூட, அந்த உரையாடல் வரும் காட்சியை இன்று பார்த்துவிட்டனர். பாஜகவினருக்கு நம் நன்றி!

அண்ணா, கலைஞர் படங்களுக்கு அன்று எவ்வளவு எதிர்ப்பு, எவ்வளவு விமர்சனங்கள்! என்றைக்காவது அது கண்டு அஞ்சியதாக யாரேனும் சொல்ல முடியுமா? பராசக்தி படத்திற்குப் 'பரப்பிரம்மம்' என்று ஓர் ஏடு விமர்சனம் எழுதியது. கலைஞர் தன் அடுத்த நாடகத்திற்கு அதனையே தலைப்பாக்கினார். அறிஞர் அண்ணாவின் 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' திரைப்படத்திற்கு விமர்சனம் எழுதிய குமுதம் இதழ், ஒரு பக்கம் முழுவதையும் காலியாக விட்டுவிட்டு, கடைசியில், கீழே, "வெட்கக்கேடு" என்று மட்டும் எழுதி இழிவுபடுத்த முயன்றது. எல்லாவற்றையும் கடந்துதான் வந்திருக்கிறோம்!

ஆனால் இன்றோ, மெர்சலைக் கண்டு மெர்சலாகிப் போனார்கள் பாஜகவினர். வென்றுவிட்டார்கள் விஜய் ரசிகர்கள்!!

# கேள்வி பிறந்தது அன்று...

● சிவதி

"ஏன்? எதற்கு? எப்படி?" என்று வினா எழுப்பிக்கொண்டே இரு. பகுத்தறிந்து பார். உண்மை அதில் உள்ளது என்றால் ஏற்றுக்கொள் என்றார் பகுத்தறிவுப் பகலவன் ஈ.வே.ரா. கேள்விகளில் இருந்து ஞானம் பிறக்கும் என்பதற்கும் மாறாகத் தென்னகத்தில் கேள்விகளால் நடத்திய வேள்வியில் ஓர் இயக்கமே உதயமானது.

கேள்விகள் இல்லாத மனித வாழ்வே இல்லை. கேட்கும் அறிவால்தான் நாம் ஐந்தறிவிடமிருந்து விலகி நிற்கிறோம். மனிதனின் மாண்புகளை உரையாடல்கள் மேம்படுத்தி அமைக்கின்றன. கேள்வியின்றி உரையாடல் தொடர்வதில்லை.

நவீன உலகில் எதைப்பற்றியும் நமக்கு ஐயமும் வியப்பும் மேலோங்கியிருக்கிறது. அது குறித்துக் கேள்வி எழுப்பி தெளிவுபடுத்திக் கொள்ளுதல், நம்மைத் தேடலை நோக்கித் தள்ளிவிடுகிறது. சரி யாரிடம் கேள்வி கேட்பது? சரியான பதில் யாரிடம் இருந்து கிடைக்கும் என நாம் சிந்திக்கும் வேளையில் இந்த இடத்தினைச் சரியாக நிரப்ப நமக்கு நல்லதோர் செயலி கிடைத்திருக்கிறது. கூகுள் பிளே ஸ்டோரில் Quora என்று தட்டச்சு செய்தால் சிவப்பு நிறத்தில் 'Q' என்ற எழுத்தின் வடிவத்தில் ஒரு செயலியினை நீங்கள் காணலாம். கேள்விகளும் பதில்களுமாக ஒழுகமைக்கப்பட்ட இந்தத் தளத்தினை சூன் 2009 இல் நிறுவிய ஆடம் டி'ஏஞ்செலோ மற்றும் சார்லி சீவெர் பொதுமக்களுக்கு சூன் 21, 2010இல் அணுக்கம் வழங்கினர். இது ஆண்ட்ராய்டு செயலியாக வந்தது முதல் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொடிகட்டிப் பறக்கிறது.

அதனை அடுத்த நொடியே தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.

ஒரு மிகப்பெரிய ஆசான் நம் கைக்குள்ளே வந்துவிட்டார். உங்களுடைய சந்தேகம் எது குறித்து வேண்டுமானாலும் இருக்கலாம். அது பற்றி இந்தத் தளத்திற்குச் சென்று பதிவு செய்யுங்கள். இதற்கான விடை உங்களுக்கு அடுத்த கணப்பொழுதே கிடைத்துவிடும். அதுவும் உரிய வல்லுநரிடமிருந்து. சில நேரங்களில் ஒரே கேள்விக்குப் பல விடைகள், பல தரப்பினரிடமிருந்து கிடைக்கக்கூடும்.

இணையத்தைத் தட்டினால் நமக்கு கோடான கோடி கேள்விகளுக்கான பதில்கள் கிடைக்கின்றன என்பது உண்மைதான். அந்த அளவிற்கு மற்றொரு உண்மையும் அதில் பொதிந்து உள்ளது. நமக்கு கிடைக்கும் தரவுகளில் பாதிக்கு மேற்பட்டவை நமக்கானவையும் அல்ல, நம்பகமானவையும் அல்ல. உங்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் இந்தச் செயலியை ஓர் உருட்டு உருட்டினால் போதும் எண்ணற்ற கேள்விக்குப் பல பதில்கள் பல தளங்களில் இருந்து பெறப்பட்டுள்ளதை நாம் பார்க்க இயலும். சரியான மற்றும் விளக்கமான பதில்களுக்கு வாக்களிக்கவும் முடியும். தவறான பதில்களுக்கு நாம் எதிர்வினையாற்றவும் முடியும்.

தொடர்ந்து வாசிக்கும் பழக்கம் உள்ளவராக நாம் இருப்போமானால் நம்மை Update ஆக நம்மை வைத்துக்கொள்ள இது உதவும். நாம் சில துறைகளைத் தேர்வு செய்து கொண்டால் அது தொடர்பான வினாக்களை நாம் தொகுத்தும் பெற இயலும். நம் நடைமுறைகளில் உள்ள பல ஐயங்களுக்கு இதில் வினாக்களும் விடைகளும் இதில் சாத்தியப்படும். பல லட்சம் தலைப்பிலான கேள்விகளும் பதில்களுமாக இந்த அறிவுச் சுரங்கம் மிகுதியாகத் தரவிறக்கம் செய்யப்பட்டு பயன்பாட்டில் அசத்துகிறது.

சட்டம், வேதியல், உயிரியல், தொழில் நுட்பம், இயற்பியல், உளவியல் என அனைத்துத் துறைகளில் இருந்தும் ஆதாரத்தோடும் உரிய நிழற்படத்தோடும் பதில்கள் களைகட்டுகிறன. உண்மையில் இதனைப் படிக்கப் படிக்க வியப்பாக உள்ளது. எந்தத் தனியார் நிறுவனமும் இதில் பங்கேற்கவில்லை என்பதால் பதிலில் இருட்டடிப்போ அல்லது சார்பான பார்வையோ இல்லை. இதில் பங்கேர்பாளர்களே முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

பல்வேறுபட்டவர்கள் தங்கள் தாய் மொழியில் அறிந்தவற்றை அளவாக, அழகாக ஆங்கிலத்தில் இங்கே பரிமாறுகின்றனர். அது அறிவியல் பூர்வமாக மட்டுமல்லாமல் தங்களது அனுபவ மொழிகளும் உள்ளடக்கியுள்ளது பல நேரங்களில் நமது ஐயங்களைத் தெளிவு படுத்தி நல்ல முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

அறிவு சார்ந்த தளத்தில் மட்டுமே இது இயங்கவில்லை. பன்முகத்தன்மையோடு இந்தச் செயலி பயணிக்கிறது. நீங்கள் ஒரு இருசக்கர வாகனம் வாங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். அதனைப்பற்றி அறிய வேண்டுமென்றால் அந்த வாகனத்தின் பெயரை மட்டும் உள்ளீடு செய்யுங்கள். அதுவே போதும். அந்த வாகனம் தொடர்பான எழுப்பப்பட்ட கேள்விகளும் அதற்கு வல்லுநர்களின் பதிலும், பயனர்களின் பதிலும் அதிகமாக இருக்கும். இதில் மிகச்சிறந்த பதில்களும், பயனுள்ள பதில்களும் வாக்குகள் அதிகம் பெற்று நம்பகத்தன்மையினை உறுதி செய்து கொடுக்கும்.

மிகுதியான பொருத்தமான நிழற்படங்கள் நம்மை வசீகரிக்கின்றன. கைகளில் திறன் பேசியினை வைத்துக்கொண்டு பொழுது போகாமல் சிலர் கணினி விளையாட்டுகளைத் திரையில் விளையாடிக்கொண்டு இருப்பார்கள். அவர்கள் கவனம் இதில் மடைமாற்றும் அடையுமானால் உறுதியாக அவர்கள் தாங்கள் சார்ந்த துறையில் தம்மை மேம்படுத்திக்கொள்ள ஏதுவாக இருக்கும். இல்லை தாங்கள் மேம்பட்டவர்களாக இருப்பாராயின் அவர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டவும் முடியும். சிறப்பான பதில்களை ஒருவர் தொடர்ந்து பதிகிறார் எனில் அவரைக் குறியிட்டு நீங்கள் அவரைத் தொடரவும் முடியும். அவர் பதில் அளிக்கும் போதெல்லாம் உங்களுக்கு அலாரம் ஒலி வழியே தகவல் வந்துவிடும்.

எந்த ஒரு கேள்விக்கான பதிலுக்கும் நீங்கள் நன்றி கூறவோ, அதனைக் குறிப்பெடுத்து முக்கியம் எனக்கருதிப் பாதுகாக்கவோ, அதனைச் சரிசெய்யப் பரிந்துரை அளிக்கவோ, புகார் அளிக்கவோ, எதிர்த்து வாக்களிக்கவோ முடியும் என்பதால் இதில் அப்பட்டமாக சனநாயகம் காப்பற்றப்படுகிறது. தான் தோன்றித்தனமாக ஒவ்வாத கருத்தை தெரிவிப்பதற்கான வழி தடுக்கப்படுகிறது.

பல பகுதிகளில் வேடிக்கையான கேள்விகளும் விநோதமான பதில்களும் கூட உள்ளன. ஆனால் எங்கும் அபத்தமான பதில்களைப் பார்க்க இயலவில்லை. அவ்வாறு இருப்பின் அதனை நீங்கள் புறக்கணிக்கவும் தடுக்கவும் கூட முடியும். காலை எழுந்தது முதல் வினாக்கள் இல்லாமல் விடிவும் இல்லை, நாம் விடை தெரியாமல் உறங்குவதும் இல்லை.

உங்களிடத்தில் யாரோ ஒருவர் ஒரு கேள்வியினை எழுப்புகிறார் எனக்கொள்வோம். அக்கேள்வி உங்கள் திறனக்கு மிஞ்சியதாக இருக்குமாயின் இனி கவலை இல்லை. இந்த 'க்வாரா' செயலியின் உதவியினை நாடுங்கள். உங்கள் நண்பருக்குத் தேவையான பதில் அதில் கிடைக்குமாயின் இதனை மின்னஞ்சல் வழியாகவோ, வாட்ஸ்ஆப் வழியாகவோ இல்லை இதற்கு இணையான எந்த ஊடகத்தின் வழியாகவோ இதனை எளிதாகப் பகிர முடியும்.

ஒருவர் சொல்லுவார் 'கேள்வி முக்கியம்னு நெனைக்கறவன் சத்தமா கேட்பான். பதில்தான் முக்கியம்னு நெனைக்கறவன் மெதுவா கேட்பான்' என்று இங்கே எல்லாமே முக்கியமாக கருதப்படுவதால் இரண்டுமே சத்தமாகவே உங்களுக்குப் பரிமாறப்படுகின்றன.

இணைப்பைச் சொடுக்கிச் செயலியைப் பெறுக https://play.google.com/store/apps/details?id=com.quora.android ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.